Registered No. M. 1953.] [வருட சந்தா ரூ. 1—0—0

ஸ்ரீ அண்டவிநாயகர் துணை.

# குணநிதி.

திருவிடைமருதூரினின்று வெளியாகும்
ஒரு மாதாந்த செந்தமிழ்ப்பத்திரிகை.

# GUNA NIDHI.

மலர் 1.] இரக்தாக்ஷி௵ புரட்டாசி௴ ௧௫ [இதழ் .4

பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் துதி | ... 73 |
| 2. | அறம் | ... 75 |
| 3. | காழிக்கல் வெட்டுக்கள் | ... 78 |
| 4. | தமிழணங்கின் சீர் குன்றக் காரணமென்ன? | ... 81 |
| 5. | அறநெறி விளக்கம் | ... 83 |
| 6. | பாவை | ... 86 |
| 7. | தாய்மொழியை வளர்த்தல். | ... 87 |
| 8. | வெற்றிக்குரிய வழிகள் | ... 89 |
| 9. | தொண்டைமான் இளந்திரையன் | ... 91 |
| 10. | நம்மாழ்வாரது திருச்சீர்த்தொடை. | ... 93 |
| 11. | சிவப்பிரகாசன் | ... 94 |
| 12. | விசேஷக் குறிப்புகள் | ... 96 |


பத்திராதிபர்
ம. சோ. பிச்சையதேசிகர்
திருவிடைமருதூர்.

# "குணநிதி"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி யுள்பட | உள்நாட்டிற்கு | 1—0—0 |
| | வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை விலை | 0—2—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழுவிலாசத்தையும் எழுதி யனுப்பல்வேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னர் அனுப்பியாவது வி. பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

(3) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரை பார்த்து அதற்குமேல் அதே தமிழ் மாத முடிவிற்குள் தெரிவித்தல்வேண்டும்.

(4) கடிதம் எழுதுங்கால் சந்தாதார் நம்பரைக் குறித்தல் நலம் பதில்விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் முத்திரையாவது அனுப்பினலன்றி விடையளித்தல் இயலாது.

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா. | உள்நாடு ... ... | ரூபா. 15—0—0 |
| | வெளிநாடு ... ... | „ 20—0—0 |
| வருடம் ஒன்றுக்கு | அபிமானிகளுக்கு | ரூபா. 25 0—0 |
| | போஷகர்களுக்கு | „ 50—0—0 |

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | | ரூபா. 6—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | „ | „ 3—8—0 |
| கால் பக்கத்திற்கு | „ | „ 2—0—0 |

முன் பணம் இன்றி விளம்பரஞ் செய்யப்படமாட்டாது.

"குணநிதிப்" பிரசுரசாலை, திருவிடைமருதூர்.

Publisher V, S, Venkatrama Sastrigal, Kumbakonam
Publisher:— M. S. Pichaiya Desikar, Thiruvidaimarudur.

உ

ஸ்ரீ ஆண்டவிநாயகர் துணை.

# குணநிதி.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக "—திருக்குறள்.

(All Rights Reserved.)

மலர் 1 } இரக்தாக்ஷி-ஹூ புரட்டாசி-மீ கல } இதழ் 4.
1924-ஹூ ஸெப்டம்பர்-மீ 16உ

## கடவுள் துதி.

திருச்சிற்றம்பலம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே.

## தமிழ்த்தாய்.

(ஆனந்தக் களிப்பு.)

எங்களருந்தமிழ்த்தாயைப்—புகழ்ந்
தேத்திவணங்கிடத்தீர்ந்திடும் மாயை. (எங்)
கங்கை தவழ்சடை யண்ணல்—தந்த
காசினி போற்றுங் கவின்பெறு நற்றாய்
சங்கத் திருப்பி லிருந்தே—பெருந்
தாரணி யாவுந் தனித்தரசாண்டாள் (எங்)
பாண்டியன் சோழன் முதலாப்—புவி
பார்த்திபர் சிந்தை மகிழ்ந்து பணிந்தே
வேண்டிய யாவையு மெய்தித்—திசை
மேவும் பெரும்புகழ் பெற்றா சாண்டார் (எங்)

கம்பனுயர் காளமேகம்—முதற்
கல்விக் கடலுணர்ந் தோரெங்கள் தாயின்
செம்பது மப்பதம் போற்ற—அவர்
சிந்தை நிறைந்த வருட்கவி யானார் (எங்)
தென்னனுடற்பிணி தீர்த்தாள்—புகழ்
தேங்கு நெடும்புன லேயெதிர் சென்றாள்
மன்னவன் ஞானசம் பந்தன்—எழில்
வாக்கி லிருந்து வளங்கள் நிறைந்தாள் (எங்)
கும்பமுனிமகிழ்ந்தந்நாள்—சிந்தை
கூர்ந்துகொடுத்த விலக்கணங் கொண்டே
யும்பர் மொழிக்கு நிகராய்த்—தழைத்
தோங்கி வளர்ந்து பெரும்புகழ் பெற்றாள் (எங்)
மூன்று பெருந் தமிழாக—நின்று
மூதறி வாளர் வளர்த்திட வாழ்ந்தே
ஆன்ற பெருந்தமிழ் நூல்கள்—பல
ஆயிரம் பெற்றவள் சிந்தை களித்தாள் (எங்)
கன்னட மாந்திர மோடு—உயர்
காட்சிசெய் மாமலை யாளந் துளுவம்
என்னு மரிய மொழிகள்—யாவும்
ஈன்று வளர்த்துப் புவியில் நிறைந்தாள் (எங்)
காவிய கோடிகள் கொண்டாள்—நிறை
காசறு மாமணி மேகலை கொண்டாள்
பாவியல் முற்று முணர்ந்த—தமிழ்ப்
பாவலர் சொல்கவி மாலை புனைந்தாள் (எங்)
ஞானவொளியை யளிப்பாள்—உயர்
நாற் பொருள் தந்து நவையறுத் தென்றும்
ஊனமில் பேற்றை யளிப்பாள்—அவள்
உம்பரும் போற்று மரும்பதத் துய்ப்பாள் (எங்)
இத்தகு மேன்மைகள் உற்று—புவி
எங்கும் தமிழ்மணம் தந்து விளங்கும்
முத்தமிழ்த் தாயடி வாழ்க—மிக
மொய்ம்புறு நந்தமிழ் மாந்தர்கள் வாழ்க (எங்)

# அறம்.

'அரிது அரிதுமானிடராதலரிது' என்னும் ஆன்றோர் வாக்கின்படி பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும் யாதொருவித ஊனமின்றிப் பிறப்பிற்கேற்பக் கரசரணாதி அவயவங்களையும் பெற்று ஈசனருளால் பெறற்கரிய அருங்குணங்களையும் தம்மிடத்தே கொண்டுள்ளமையால் அடைதற்குரிய பயன் யாதெனில் அறமேயாம். 'அறம்' என்பது தருமம் என்று பொருள் படும். ஆராயுங்கால் அத்தருமம் பல்வகைப் படுமாயினும் ஈண்டு யாம் அதனைச் சுதர்மம் பரதர்மம் என்று வகுத்துக்கொண்டு முதலில் சுதர்மத்தைப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துவாம். சுதர்மம் என்பது அவரவர் தத்தம் பெண்டு பிள்ளைகள், தாய் தந்தையர் சோதரர் சோதரிகள் பெரியோர்கள், குருக்கள்மார், முதலானோரிடத்தும் ஏனைய உயிர்களிடத்தும் செலுத்த வேண்டிய கடமையைக் குறிப்பதாகும். 'இல்லறமல்லது நல்லறமன்று' என்றபடி இவ்வுலகில் சகலபாக்கியங்களையும் அனுபவித்து மறுமையில் வீடு பேறு அடைந்து நித்யாநந்த முறுவதற்கு உத்தம வாழ்க்கையான இவ்வாழ்க்கையே முக்கிய காரணம். அத்தகைய வாழ்க்கையில் அனுசரிக்க வேண்டியவைகளே சுதர்மங்களுள் சிறந்தனவாம். இதற்குச் சாதனமாகவே சிருஷ்டிகர்த்தா கரசரணாதி அவயவங்களையும் கொடுத்து அருங்குணங்களையும் அருளியிருக்கிறார். பொருளழிவு, உயிர்ச்சேதம், முதலான எவ்வித இடுக்கண் நேர்ந்தாலும் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று நிஷ்களங்கமாக நமது சுதர்மத்தை நாம் கைவிடல் தகுதியன்று. இத்தகைய தர்மங்களைப் பகவானே நேரில் மானிட அவதாரமெடுத்து நடித்துக் காட்டியிருத்தலை இராமயணம் முதலான இதிகாச புராணங்களால் யாவரும் உணர்ந்திருத்தல் கூடும். சிவபெருமான் தாம் கொண்ட லீலைகளிலெல்லாம் இத்தருமத்தையே அடிப்படையாகக் கொண்டுளார். இத்தருமத்துக்கு முக்கியாம்சம் யாதெனில் களங்கமற்ற அன்பேயாகும். புன்சிரிப்போடு கூடிய பிரியவசனங்களினாலும் சந்துஷ்டியோடு

கூடிய நடை உடைபாவனைகளினாலும், அடக்கம் பொறுமை சுயநல மின்மை முதலிய நற்குணங்களினாலும் இத்தருமம் நன்கு பிரகாசிக்கும்.

இதன் கருத்தையே இளஞ் சிறுவர்களுக்கு உபதேசிக்கும் வண்ணம் சிறுபழமொழிகளாக ஔவைப்பிராட்டியார் போன்ற நல்லறிஞர்கள் பரக்கப்பாடியுள்ளார்கள். இத்தருமத்தை யனுஷ்டிப்பதில் எவ்வித கைம்மாறும் கருதாது அப்யசித்தல் வேண்டும். நாம் உட்கொள்ளும் சத்துள்ள ஆகாரங்கள் நம்மை யறியாமலேயே எப்படி நம் சரீரத்திலுள்ள மாம்சம் தசை நரம்பு முதலியவைகளைப் பலப்படுத்தி சரீரத்தை வளர்க்கின்றனவோ அவ்விதமே, நாம் மேற் சொன்னபடி நம் சுதர்மமாகிய கடமையைக் களங்கமற அனுஷ்டித்து வந்தால் அதுவே நம் பிறவிப்பயனைப் பெறுதற்கு ஏற்ற சாதனமாகும். அஃதின்றி அச்செய்கைகளில் மனதைச் செலுத்தி முறைதவறான விஷயங்களில் தலையிடுவோர் பெருந்துன்பத்திற் காளாகிக் கண்டோர் சிரித்துப் பரிகசிக்கும்படியான இழிந்த நிலைமையை அடைவதை நாம் நாடோறும் கண் கூடாக் காண்கிறோம். அப்படியே சுதர்மத்துக்கு மாறாக நடப்போர் பெருந்துன்பமடைந்து, சகல பாபங்களுக்கும் உள்ளாகித் தீய நரகில் புகுந்து வருந்த நேருமென்பது திண்ணம். இதுவே நம்மைப்படைத்த கடவுளின் கருத்தாகும். இஃது இங்ஙன்மாக, பலர் தங்களால் இயன்ற மட்டும் பொருளைத்தேடி தாங்கள் உண்ணுதும் உடாதும் தாய் தந்தையராகிய இருமுது குரவர்களையும் பிற சுற்றத்தார்களையும் காப்பாற்றாது தெருவில் அலையவிட்டு, தாம் தேடிய பொருளை, பாங்கி வியாபாரசாலை முதலான இடங்களில் வட்டிக்குக் கொடுத்தும், வீட்டுச் சுவர்களினுள்ளே வைத்துக் கட்டியும் இறுக்கி விடுகிறார்கள். பாவம்! இப்பொருளை யார் எப்பொழுது பெற்று எவ்விதம் செலவிடுவார்களோ! இதன் விந்தையே விந்தை! மற்றும்சிலர் பொருள்களை அநியாயவட்டிக்குக் கொடுப்பவராயும் சிலர் வியபசார முதலிய வழிகளில் செலவிடுபவர்களாயும் இருக்கின்றனர். சிலர் தங்கள் பங்காளி

களுடன் ஓர் அடி நிலத்துக்கு ஓர் ஆயிரம் வீதம் வியவகார சாலைகளில் செலவழிப்பவராயும், சிலர் விவாகாதி காலங்களில் புகழையே பெரிதாக மதித்துப் பலவித ஆடல் பாடல் முத லான டாம்பீகச்செலவு செய்பவர்களாயும், சிலர் சைக்கிள் மோட்டார், கோச், குதிரை, முதலான நவீன நாகரிகங்களில் அளவற்ற பொருளை இழப்பவர்களாயும், சிலர் மதுபானம் சூது முதலான தீச்செயல்களில் செலவு செய்பவர்களாகவும் இருக் கின்றனர். இன்னோர் தம் இறுதிக்காலத்தில் பரிதாபமான நிலை யை அடைவரென்பது திண்ணம். இவ்விஷயங்களில் கோடிக் கணக்கான பொருளை வீணில் செலவு செய்பவர்களை இன்றும் கண் கூடாகப்பார்க்கிறோம். என்ன பரிதாபம்! இப்படி அழிந்த குடும்பங்கள் பல; இன்னும் அழிந்தும் வருவனபல. இவை யெல்லாம் நம் அருங்குணநிதியைப் பற்றியுள்ளவர்க ளுக்கு எள்ளளவேனும்உண்டாகா. அருங்குணங்கள் அடைந்த பின் ஏழைகளாயிருந்தாலென்ன? பொருளாளர்களாயிருந்தா லென்ன? ஆணாயிருந்தாலென்ன? பெண்ணாயிருந்தாலென்ன? சிறியராயிருந்தாலென்ன? பெரியாராயிருந்தாலென்ன? யாரா யிருந்தாலும் அவரவர்கள் தாம் ஒருவர்க்கொருவர் செய்ய வேண்டிய கடமைகளை வழுவறச்செய்வதனாலேயே சரீர சுகத்தையும் ஆன்ம சுகத்தையும் அடைவார்கள் என்பது நமது துணிபு. ஆதலின் பன்னெடுங்காலமாகநிலை பெற்றுள்ளநான்கு விதவருணத்தாரும் குணநிதியின் பயனாக, தத்தம் வருணாச் சிரமததுக்குரிய நிதயகர்மானுஷ்டானங்களைக் காலவழுவின்றி முடித்தும் மாதா பிதா குரு தெய்வம் முதலானோர்களுக்குத் தத்தம் கடமைகளை எவ்வித கைம்மாறும் கருதாது எவ்வாற்றா னும் செலுத்திச் சுதர்மம் வழுவாது விளங்கச் செய்தும் அத னால் உலகெங்கும் சுபிக்ஷமுண்டாகவும் நம் 'குணநிதி' என்றும் பரவிவரவும் காரணமாயிருப்பார்களென்றும் நாம் உறுதியாய் நம்புகிறோம். சுபம்!

# காழிக் கல்வெட்டுக்கள்.

(54-வது பக்கத்தொடர்ச்சி)

உலோக வகை நீங்கச் சாஸனங்களெழுதப் பட்டுள்ள பொருள்கள்:—(1) ஸ்படிகம் (2) களிமண் (இம்மண் ஒன்றில் தானுகவே உலர்ந்தது, ஒன்றில் செயற்கை செய்து இறுக்கியது: மற்றொன்றில், செங்கல்லாகச் சுட்டது; இன்றேல் களிமண்ணையும் மணலையும் கலந்து சூட்டால் இறுக்கியது). (3)மட்பாத்திரம் (4) பலவுருவக்கல் (5) கடம் படம் பலகை மரச்சித்திரபீடம் களிமண் முத்திரை பொறித்த தோல் துண்டு கடிதம் அசுமலோட்டினம் போல்வன. கி.மு. 2ஆம் நூற்றுண்டில்மசியினுலெழுதியசிலசாஸனங்கள் மத்தியஇந்தியாவில்போஜப்பூர் சஞ்சி முதலிய இடங்களிற் கிடைக்கின்றன. அலகபாத் ஜில்லாவிலும் ரீவாரர்ஜ்யத்திலுமுள்ள ஜின்ஜா குன்றில் மைப்பூச்சால் எழுதிய சாஸனங்கள் உள. அவற்றுட்சில பீமசேன னென்ற மகாராஜனைப்பற்றியன. அவன் காலம் கி.பி. 375 அல்லது கி.மு. 5-ம்வருஷத்ததென்றுங் காட்டுகின்றன. முகம்மதிய சாஸனங்கள் எப்பொழுதும் நன்றாய் வெட்டப்பட்டுள. வெட்டப்பட்ட பொருள் யாதாயினும் அதில் வெட்டிய எழுத்தே நமக்குச் சாதனம் ஆவது.

பெரும்பாலும் எல்லாச்சாதனங்களும் கற்கள் மேலேயே காணப்படுகின்றன. அவ்விதக் கற்பாறைகளில் முக்கியமானவை யுசப்ஜா என்னு நாட்டில் ஷிபாஜ்காரியிலும், ஹசரா ஜில்லாவில் கங்கடாவிலும் இருக்கின்றன. இவைகளில் அசோகர் மதங்களைப்பற்றியும் சன்மார்க்கங்களைப்பற்றியும் செய்த அறிக்கைகட்டளைகள் காணப்படுகின்றன. அல்லஹபாத் டெல்ஹி முதலிய விடங்களில் ஒற்றைக்கல் கம்பங்களில் அசோகரின் ஏழு—தூண்—ஆக்ஞா—சட்டங்கள் உள. நேபாளத்தாரையி

லுள்ள ருமினிடையிலுள்ள சாஸனம் புத்தர் பிறந்த உலும்பினி வனத்தின் இடத்தைக் குறிக்கிறது. நமக்குக் கிடைத்திருக்கும் சாஸனங்கள் வரையப்பெற்ற கல்லாற் செய்த பாத்திரங்களுள் நிரம்பப் பழமையுடன் விளங்குவதாகஇருப்பது, ஒன்று தான். இது பிப்ராஹவா என்றவிடத்திலிருந்து கிடைத்தது. புத்தர் கதி பெற்ற ஒரு நூற்றாண்டிற்குள் வைக்கப்பட்டிருக்கலாம்; இது கபிலவஸ்து இருக்குமிடத்தைத் தெரிவிக்கும். புத்த ஸ்தூபிகளின் வெளிப்புறத்திலும் கட்டடமுகங்களிலும் சுவர்கள் மேலும் நடுகல் கற்பாவை முதலியவற்றின் பீடங்களிலும் சாஸனங்கள் காணப்படுகின்றன. கடகத்திற்கருகிலுள்ள ஹதிகும்ப குகையில் (கி. மு. 156) கலிங்கதேசத்துக் காரவேள் ராஜனைப்பற்றிய சாஸனங்களுள. எழுத்துக்களையுடைய முத்திரைகள் செய்வதற்குக் கல்லாற் செய்த அச்சுக் கருக்களும் முத்திரைக்கம்புகளும் பல இடங்களிற் கிடைக்கின்றன.

## சாஸனங்களில் கூறப்படும் விஷயங்களும், அவைகள் தேச சரித்திரத்திற்கு ஏதுவாகும் வகைகளும்.

சில சாஸனங்கள் மதசம்பந்தமான விஷயங்களைப் பற்றியும் நற்கொடைகளைப் பற்றியுமே கூறுகின்றன, இவ்வகைச் சாசனத்தில் கலிங்க தேசத்துக் காரவேள் ராஜாவின் காலத்தைச் சுருக்கிக் கூறும் ஹதிகும்ப குகைச் சாஸனம் தேச சரித்திரத்தில் மிகவும் உதவுவது. இதர சாஸனங்கள் பொதுக்கட்டடங்கள் கட்டப்பட்ட விஷயங்களைச் சொல்லும் குறிப்புக்களையும், ஜன சமுதாயத்திற்குச் செய்யப் படும் விளம்பரங்களையும் இராஜீய உடன்படிக்கைகளையும், மேஹ்ரால் இருப்புத்தூணிலுள்ள சிறு பாடலையும், போர் வீரர்கள் சமர்க்களத்தில் முடிந்ததைப் பற்றிய வீரத்தையும் கூறும்.

சாஸனங்கள் பெரும்பாலும் மதசம்பந்தமான நோக்கங்களைக் கூறுகின்றனவென்று சொன்னோம். பெஷாவாரிலுள்ள ஷாபாஜ் கார்ஹி என்ற ஊரிலிருந்து மைசூரிலுள்ள சித்தப்பூர்

வரையிலும், கடகத்திலுள்ள தாலி என்னும் ஊர் முதல் கத்தியவாரில் கிர்நார் என்ற ஊர் வரையிலும் உள்ள அசோகரின் கற்பாறைக் கற்றூண்களைப் போலவே அச்சாஸனங்களும், மதசங்கதிகளையும் நீதி நெறிகளையும் கூறு நிற்கின்றன. ஞானிகள் யோகிகள் ஆசார்யர்கள் இவர்களுடைய ஞாபகமும் புகழும் பரவுவதற்காகவும் அவர்களால் புகழ்தற்காகவும் சஞ்சி கோனேரி முதலிய விடங்களில் சேஷச் செப்புகளின் மேல் எழுத்துக்கள் வரையப்பட்டுள. தேவாலயங்களைக் கட்டியும ஜீர்ணோத்தாரணம் செய்தும் ஏற்பட்ட சாஸனங்கள் மிகப்பல. க்ஷேத்திர காமினிகளுக்கு நிரம்ப உதவும். சில விஷயங்கள் சஞ்சியைப்பற்றியும் பாருத்தைப் பற்றியும எழுதிப் போந்துள. தேவாலய மடாலய பிரமாலயங்களும் வேத வேதாந்த சாஸ்திர கலாசாலைகளும் அந்தணர் அறவோர் புலவர் மாணவர் இன்னோரன்னோர் தருமசாலை சத்திரம் இவை நடை பெறப்பட்ட சொத்துக்களையும், மதாசார்யர்களுக்குத் தானமாகக் கொடுக்கப் பட்ட நிலபலன்களையும் குறிக்கும் சாஸனங்கள் எல்லாம் மதஸ்தாபன சாஸனஙளின்பாற் படும். இவற்றில் தேசசரித்திர சம்பவங்கள் வெகு சொற்பமாகத்தான் காணப்படுகின்றன.

இவை தவிர மத சம்பந்தம் யாதேனுமின்றிச் சிறந்த மனிதர்களுக்கு மானியமாக விடப்பட்ட இனமத்து நாமாக்களைக் குறிக்கும் சில சாஸனங்களும் இருக்கின்றன.

(தொடரும்)

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை.

---

## தமிழணங்கின் சீர் குன்றக் காரணமென்ன ?

(57-வது பக்கத்தொடர்ச்சி.)

அக்காலத்துக் குறைவடைந்ததாயினும் அடுத்த சோழர்கள் காலமுதல் அது தன்னிலையை யடைந்தது மன்றிச் செழித்தோங்கி வளரவும் தலைப்பட்டது. அப்படி யோங்கி வளர்ந்த தமிழானது தற்காலத்தில் குறைந்து வருகிறது. அதற்குரிய காரணங்கள் இவையெனக் காட்டினும். இவற்றைத் தொகுத்துக்கூற, பள்ளியில் பயிலும் மாணவர்களும் உபாத்தியாயர்களும் போதிய கவனம் செலுத்தாமை ஒன்று, அரசாங்கத்தினரின் அசட்டை இரண்டு, நியாயமன்றங்களில் கவனிக்காமல் எழுதிக் கொடுத்ததை யொப்புக் கொள்ளுதல் மூன்று, மிராசுதார்கள் வணிகர் முதலாயினரிடத்துக் கணக்கெழுதுவோர் பிழைபடுதல் நான்கு, போன்றவைகளே. இவற்றில் ஜனங்களாகிய நாமே நம்மைச் செம்மை செய்து கொள்ளக் கூடிய இனங்கள் பல. அவற்றுடன் பிழைபறவும் எழுத்துச் சோரம் இல்லாமலும் எழுதப்பழகுதலுஞ்சில. இது முதல் அவ்வாறு ஒவ்வொருவரும் அந்த விடயத்திற் கவனம் வைப்பார்களாயின் வெகு சீக்கிரத்தில் இது தீர்ந்து விடலாம். அப்பொழுது அரசாங்கத்தார் தலையிட வேண்டுமென்ற நியதியில்லை. என்? நாமே நம்மைச் சீர் செய்து கொண்டுவிட்டால் வேண்டாமென்று சொல்பவர் யார்? ஆகையால் இதுவிஷயத்தில் முயற்சி செய்பவேண்டியவர்கள் நாமே யாவோம்.

ஆயினும் அரசாங்கத்தாரும் இக்குறைக்கு ஒருவழியாகக் காரணராவார்கள் அவர்களே பள்ளிக்கூடத்தை வைத்து நிர்வகிப்பவர்கள் அல்லது ஆதரிப்பவர்கள். அவர்கள் தேசபாஷை என்ன நிலைமையிலிருக்கிற தென்று கவனித்தார்களில்லை. அவர்கள் கவனிப்பதாகத் தான் சொல்லுகின்றனர். ஒரு மேற்பரிசோதகர் எவ்வளவு கலாசாலைகளைப் பரிசோதிக்க முடியும். அதனிலும் தமிழ் தேசபாஷை தெரிந்தவர்களும் வருகின்றனர். தெரியாதவர்களும் வருகின்றனர். பின்னர் பிறர் உதவியை நாடவேண்டியவர்களாகின்றனர். பொதுவாக அரசாங்கத்தினர்

தேசபாஷை கலாசாலைகளில்போதியபடி பயிற்றப்படுகிறதென்றும் உபாத்தியாயர்களும் உள்ளபடி அறிந்தவர்களென்றுமே இதுகாறும், இன்னமும் நினைத்திருக்கின்றனர். அவர்களுக்கு இவ்வித எண்ணத்தைஉண்டு பண்ணியதும் நாமே. ஆகையால் அதன் லாபநஷ்டங்களை அனுபவிக்க வேண்டியவர்களும் நாமேயாகிறோம்.

முதலாவதாக இத்தென்னாடான தமிழ் நாட்டில் தேசபாஷை இன்னதென்று இன்னமும் நிச்சயப் பட்ட பாடில்லை. எவ்வாறெனில் தேச பாஷை தமிழாகவிருக்குமாயின் மாணவர்கள் எல்லோரும் அதனைக் கட்டாய பாடமாக எடுத்துக்கொள்ளும்படி ஏற்பட்டிருக்கும். சிறிதுகாலமுன்னர் அதாவது 1917, 1918ம் ஆண்டு வாக்கில் எஸ். எஸ். எல். சி. பரீக்ஷைக்கு எல்லா மாணவர்களும் தமிழில் ஏ குரூப் (A Group) என்று சொல்லப்படும் பாடமொன்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு அரசாங்கத்தாரால் செய்யப் பட அதனைப்பலர் எதிர்த்துக் கண்டித்தார்களாம். இதை எதிர்த்துக் கண்டித்தவர்கள் வேறு என்ன படிக்க வேண்டுமென்றனர் என்று நினைக்கிறீர்கள். சம்ஸ்கிருத பாஷையையே--இதையும் தமிழ் போலக் கட்டாயமாக வைக்கவேண்டுமென்று பாடு பட்டிருப்பார்கள் என்பதை இதனைப்படிப்பவர்களே அறிந்து கொள்ளும்படி விட்டு விடுகிறேன். இவ்வாறு கூக்குரலுண்டாகவே சம்ஸ்கிருதமும் முக்கிய பாடத்திலொன்றாக தற்பொழுது இருக்கிறது. இன்னும் ஒரு விஷயந்தான் மாணவர்களையெல்லாம் தமிழ்ப்படிக்கும்படிசெய்கிறது. அது இங்கிலீஷ் டிரான்சிலேஷன் என்னும் தேசபாஷை மொழி பெயர்ப்பும் வியாசமெழுதுவதுமே. அவைகளையும் எடுத்துவிடும்படிமுயற்சி நடக்கிறது. ஆனால் அது பலிக்காதென்றெண்ணுகிறேன். அதையும் ஒழித்து விட்டார்களானால் 'படிப்பதுசிவரகசியம் இடிப்பது சிவன்கோயில்' என்பதுபோல் தேசபாஷை பரவவேண்டும், பரவவேண்டும் என்றுவாய் கூசாமற் பிரசங்கமேடை, கலாசாலைக்கூடம் முதலானவைகளிலெல்லாம் சொல்லிவிட்டுக் காரியத்திற் கதவடைப்பதாகும். (தொடரும்)

இலக்கண விளக்க பாரம்பரை
திருவாரூர். சோமசுந்தரதேசிகர்.

# அறநெறி விளக்கம்.

(59-வது பக்கத்தொடர்ச்சி)

---

திருமூலர் திருமந்திரத்தில்,

"ஆறிடு வேள்வி யருமறை நூலவர்
கூறிடுமந்தணர் கோடி பேருண்பதின்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலே
பேறினிலோர் பிடி பேறது வாகுமே—எனவும்

"படமாடக் கோயிற் பகவற் கொன்றீயின்
நடமாடக் கோயினம்பர்க்கங்காகா
நடமாடக் கோயினம்பர்க் கொன்றீயின்
படமாடக் கோயிற் பகவற் கங்காமே—எனவும்

"வித்தகமாகிய வேடத்தாருண்டவூண்
அத்தனயன் மாலருந்திய வண்ணமாம்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்று நம்மூலன் மொழிந்ததே

எனவும் கூறியருளியதூஉம். சடஸ்தலத் திருவிருத்தத்தில்,

"கோதனத்தின் முலையிலிங்கங் குருவாமேணி
கூறிய சங்கம முகமாங் குலவுங்கீரம்
போதமுலை பொழிந்திடு மென்றதற் கன்பாகப்
புல்லளித்தாலருந்திடாவுடனுங் கொள்ளா
நீதியினாலறிந்து முகத்தளித்தாலெங்கு
நிறைவாகு முத்தி சிவலிங்கத்தேனும்
ஏதமிலாச் சங்கமத்தை வழிபடுவோர்க்கன்றி
யெய்தரிய சிவானுபவ மெய்தொணாதே.

எனவுங் கூறியதூஉங் காண்க. இவ்வாறு பதியறத்திற் சிறந்த சங்கம வழிபாடாகிய மகேசுர பூஜையிற்றம் பொருள்களைச் செல வழியாது நிந்தை செய்வோரிடத்துள்ள பொருள்கள் சூழந்தை

கைப்பட்ட பொற்கிண்ணம் போலவும் மூடனிடத்தகப்பட்ட மாணிக்கம் போலவும் அவர்களுக்குப் பயனின்றிப் பிறர் கைப் பட்டு தரித்தாராய் வருந்தி மாய்வாரென்க.

இதற்குப் பிரமாணம்

பணியப் படுவார் புறங்கடையராகத்
தணிவில் களிப்பினுற்றாழ்வார்க்—கணியது
இளையாள் முயக்கெனினும் சேயகதன்றே மூத்தாள்
புணர்முலைப் போகங்கொளல்.

" நம்பனடியார்க்கு நல்காத்திரவியங்கள்
பம்புக்காம்பேய்க்காம்பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ்சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங்காண்.

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

இது சத்தியமான வசனம். இதுயாவரானும் நிதர்சனமாய்க் கண்டதுங் காண்கிறதுங் காண்பதுமாயுள்ளது. இது நிற்க,

நமக்குக் கிடைத்த பொருள் யாராலே கொடுக்கப்பட்டது எதற்காகக் கொடுக்கப்பட்டது, என்பதையுணராதுசேர்த்து வைத்து விட்டுத் தம்முயிர்த்துணையாகிய அறஞ்செய்துய்ய வறியாது வீணே மாய்ந்து போகாநின்ற மாந்தர்களை நோக்கி பற்றற முற்றுந் துறந்த பட்டினத்தடிகளும்,

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடை நடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே.

என இரங்கிக் கூறியதூஉம் அன்றி உலகிற்குறுதி கூறும் ஔவைப் பிராட்டியாரும்,

பாடுபட்டுத் தேடிப்பணத்தைப் புதைத்து வைத்த
கேடு கெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரேயனுபவிப்பார்
பாவிகாளந்தப் பணம்.

என நம்மேலுள்ள பேரன்பாலிடித்துக் கூறியதூஉம் என் றுணர்க. இவ்வாறு செய்தல் பொருள்களை விருத்தி செய்தற்

காகப் பூமியைத் திருத்தி விதை விதைத்தல் போல்வதேயாம். பூமிகளைத்திருத்தி விதை விதைத்துப் பயிரிட்டுண்ணாது பாழாய்ப் போட்டு விட்டு வாளாவிருந்திடின் அவர்களுக்கு பொருள் வருவாய் குறைந்து நஷ்டமாவதோடு அவர்களிடத்து ஏற்கனவே யுள்ள பொருள்களையெல்லாம் இறைவரிக்காக இவ்வுலகினையாளும் அரசர்களும் தம்மேவலாளர்களால் பறிமுதல் செய்துகொண்டு இறைவரி சரிவரச் செலுத்திவரும் வேறொருத்தரிடத்து அப்பூமிகளைப் பிடுங்கிக் கொடுத்து விடல் போல; அறஞ்செய்துய்ய வறியாது வாளா விருப்போர்களது பொருள்களையும் அறவாழி யந்தணனாகிய கடவுளும் தம் மேல் வாரமாகிய அறமாகிய இறைவரிசெலுத்தாதற்காகத்தீயார்களாகிய துஷ்ட சேவகர்களால் பறிமுதல் செய்துகொண்டு பாவப் படுகுழியாகிய சிறைச்சாலையிலும் அடைத்து வருத்துவரென்க. ஆதலின் அறஞ்செய்துண்ணாதிருந்து உயிர்வாழ்தலைப் பார்க்கினும் உடனே இறந்துபோதலே மிகவும் இனிமையாகும். ஏனெனில் அவ்வாறு இறந்து விடுவோர்களுக்கு இம்மையிற் பாவமும் பழியும் பெருகாது. இவ்வுலகத்தார் பழிக்குமாறு தரித்திரதசை வாராது மறுபிறப்பெடுத்து சுகமாய் வாழ்ந்திருத்தலினாலென்க. இக்கருத்துப் பற்றியே நமது பொய்யா மொழியாரும்திருக்குறளில்,

> "என்பிலதனை வெயில் போலக் காயுமே
> யன்பிலதனையறம்—எனவும்,
> "சாதலினின்னா ததில்லை யினிததூஉம்
> ஈதலியையாக்கடை—எனவும்,

கூறியருளினாரென்க. ஆனதுபற்றி இல்லறந் துறவறமென்னும் நல்லறி நிலைகளிலே நின்றுவாழும், நம்மவர்கள்யாவரும் அன்பும் அவ்வன்பாணிகழும் அறமுமே நமக்கு நற்குணமும் நற்பயனுமாயுள்ளது என்று நன்றாயுணர்ந்து நம்மவர்கள் எக்காலத்தும் யாவரிடத்தும்மிருக்க அன்புடையோராய் மேலான அறத்தையே செய்தொழுகி யெளிதில் இகபரவின்பத்தைப் பெற்றானந்தித் துய்யக் கடவர்கள். சுபம்

தரு· ஞா· சண்முகதத்தம்பிரான்·
வேலூர்.

# பாஷை.

நீராடையுடுத்த நிலவுலகின் கண் கடவுளாற் படைக்கப் பட்டு, உலக வாழ்க்கையிலீடுபட்ட உயிர்த்தொகுதிகளனைத் தும் தத்த மெண்ணங்களைப் பிறருக்கு உணர்த்துவதும் மற்றவருடைய கருத்துக்களைத் தாம் உணர்ந்து கொள்ள வேண்டியதும் மிக இன்றியமையாததாகும். இவையின்றி உல கவாழ்க்கையை யியற்றுதல் சிறிதும் இயலாது. சாதாரண மாக ஜீவப்பிராணிகள் சேர்ந்து வாழு மியல் புடையதாகலின், அவைகளின் எண்ணங்களும் ஒன்றுசேர்ந்தே தீரவேண்டும். இத்தகை உயிர்த்தொகுதிகள் தத்தம் எண்ணங்களை வெளியிட இன்றியமையாத கருவியாக இருப்பதே பாஷையாகும்.

ஒருவன் தனது எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டுமாயின், மூவகை உபாயங்களால் வெளியிடலாம். அவை சைகை, ஒலி, எழுத்து என்பவைகளாம். முதலாவதாகிய சை கையினுல் வெளியிடுதல் சிறிது கடினமாக விருப்பினும், தம்மி னத்தாரே யன்றிச் சாதி, மதம், பாஷை, தேசம் முதலிய வற் றில் வேறுபட்ட பலரும் உணர்ந்து கொள்ளுவதற்கு அனுகூல மாக விருக்கும். உதாரணமாக எப்பாஷையினராயினும், கையை த்தட்டி வருவதற்குச் சைகைகாட்டினுல் வருவதும், தங்களு டைய விருப்பு, வெறுப்பு, உவகை, அச்சம், கோபம், ஈதல், ஏற்றல், முதலியவைகளைச் சைகையினுல் உணர்த்துவதும், நாம் கண்கூடாக் கண்டதென்பதிற் கொஞ்சமும் ஐயமின்றும். இவ்வாறே மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாத எல்லா எண் ணங்களும் பிறவும் சைகையினுல் உணர்த்தலாகும். மனிதர் களைத்தவிர, விலங்கு, பறவை முதலியவைகளும், சைகையினு லேயே மனிதனது கருத்துக்களை உணர்ந்து தொழிலைச் செய் கின்றன. மனிதவர்க்கத்துள் ஊமையர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிடுவதும், பிறருடைய எண்ணங்களைத் தாங்கள் உணர்ந்து செய்வதுமே இதற்குப் போதிய சான்று கும். ஆதலின் இதையே உலகத்தில் முதன்முதலாகத் தோன்

றிய பாஷை என்று சொல்லலாம். இதுவே எல்லாப் பாஷையினருக்கும், விலங்கு பறவை முதலிய அஃறிணை உயிர்கட்கும், இயற்கையும், பொதுவுமாகிய மூலபாஷையாகும். இப்பாஷையைப் பிறரிடமிருந்து மெய்வருந்திக் கற்கவேண்டியதில்லை. இது இயற்கையிலேயே ஒவ்வொரு மனிதனும், விலங்கு பறவை முதலியவைகளும், உணர்ந்துகொள்ளும் பெற்றியுடைத்தாதலின். இயற்கைப்பாஷையும் இதுவேயாகும்.

இரண்டாவது ஒலியினுல் வெளிப்படுத்தலாம், ஒலிக்குறிப்புகளிற்சில பொதுவாக விருப்பினும், பலவகை மாறுபாடுகளையுடையதாகும். இவ்வொலிக் குறிப்புகளால் ஓரினத்திற்கு உணர்த்த முடியுமேயல்லாது யாவருக்கும் தெரிவிக்கமுடியாது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆங்கிலம் முதலியவும் பிறவுமுள்ள பாஷைகளில் தங்களுக்குரிய பாஷையைமட்டும் உணர்ந்தவர்கள், பிறபாஷைக்காரரோடு பேசி அவர்களின்எண்ணங்களை அறிந்து கொள்ளுதல் இயலாததாகும். இவ்வாறே விலங்கு பறவைகளுமென்று கண்டுகொள்க. கற்றுக்கொடுப்பின் கிளி முதலிய சில பறவைகளும் நன்ருக வார்த்தைகளை உச்சரிப்பது நாம் ஒவ்வொருவரு முணர்ந்த விஷயமேயாகும்.

(தொடரும்)

E. K. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

---

# தாய்மொழியை வளர்த்தல்.

(68-வது பக்கத்தொயர்ச்சி.)

“நமது தமிழ்மொழியோ மக்களது காலக்கணக்கைக் கடந்ததொரு பழங்காலத்திலேயே ஒரு சீரடைந்து சிறப்புறுவதாயிற்று. பழமாண்புடையோர் எனப்படும் பாபிலோனியர் எகிப்தியர், யவனர், முதலாயினேரும் தொன்மையைநோக்கின் தமிழைவென்றவர்களல்லர். உலகந்தோன்றியது தொடங்கி நடுக்கின்றி நிலைத்திருப்பதாகக்கண்டவரையும் கேட்டவரையும்

மலேக்கச்செய்வதும், ஈடும், எடுப்பும்; அற்றுத் தனிப்புகழ் தனக்கே உரிமையாக உள்ளது என யாவராலும் ஒப்ப வியந்து கூறப்படுவதும்ஆனபேரிமையமலேயும்தோன்றுதற்குமுன்னரே தான் தோன்றித் தனிச்செங்கோல் ஓச்சியது தமிழ்மொழி என்னின், இதன் பழமையை ஆராயவல்லார் யாவர்? இப்பொழுது நீர்ப்பரப்பாய்ப் பரந்து கிடக்கும் தென்னாழி முழுதும் நீர்பரப்பாய்விரிந்திருந்தனுான்று அந்நிலப்பரப்பில் வழங்கி வந்தது நமது பழந்தமிழே ஆகும். அவ்வாறு பரந்து கிடந்த பெருநிலப்பகுதிதான் இவ்வுலகத்து முதன் முதலின் தோன்றிய நிலப்பகுதியென்றும், அந்நிலப்பகுதியிலேதான் மக்கள் முதன்முதல்தோன்றினுர்களென்றும், இப்பொழுதுள்ள பழங்கலேப் புலவர்கள் பலரும் அறிவிக்கின்றமையால், ஆண்டு வழங்கிய நமது பழந்தமிழ்மோழியே கைக்குறியாற் கருத்தை விளக்கி வந்த மக்களது நாவை உளத்திற்கிசைய இயக்கி ஒலிக்குறியாய் எழுந்த முதன் மோழிஎன்பது பெறப்படுகின்றது. இப்போதுள்ள மொழிகள் பலவற்றின்சொற்கள் தமிழ்ச்சொற்களுக்கு இயைந்தனவாயிருப்பதும், செவ்வையுருத சிலமொழிகளின் சொற்களும் அமைப்பும் (தமிழ்ச்சொற்களும், தமிழின் அமைப்புக்கும்) மிக நெருங்கிய தொடர்பைக் காண்பிப்பதும் தமிழ் ஒலிகள் இயற்கை ஒலிகளுக்கேற்ப அமைந்துள்ளதும், ஒரு பொருளேக்குறிக்கும் பல தமிழ்ச்சொற்கள் மக்களது அறிவுவளர்ச்சிக்கேற்ப ஒவ்வொரு காலத்தில் அவர்கள் கண்ட அப்பொருளினது ஒவ்வொரு தன்மையைத் தனித்தேனும் பலவற்றைக் கூட்டியேனும் குறிப்பதும் மொழி ஆராய்ச்சியாளர் யாவர்க்கும் இதனது (நமது தண்டமிழ் மொழியினது) பழமையையும் என்றும் அழியாப் புழுமையையும் விளக்கி (அன்னுரை) மகிழ்விப்ப ஆகும்." இஃதொன்றே ஈண்டைக்கு இப்பகுதியை விளக்கப் போதியதாம்.

(தொடரும்)

ஊ. சா. வேங்கடராமையர்.

# ஓர் அறிவிப்பு

திருக்கைலாயபரம்பரை திருவாடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் நமது 'குணநிதியில்' அமைந்துள்ள அரிய விஷயங்களை நோக்கி, நம் நாட்டிற்கு இத்தகைய பத்திரிகைகள் அவசியமென்றும், இக்குணநிதிப் பத்திரிகைக்குத் தங்களை நிரந்தர போஷகர்களாகவும் பதிவு செய்து கொள்ளும்படிக்கும் உத்திரவளித்ததோடு அதன் நிதியையுமளித்து, அப்போதைக்கப்போது வேண்டுஞ் சௌகரியங்களையும் செய்வதாகவும் திருவாய் மலர்ந்துள்ளார்கள். அன்னார் நம் தாய்மொழியின் முன்னேற்றத்தை என்றும் நாடி வருவதேபோல் மற்றவர்களும் முயற்சியெடுத்துக்கொண்டு வருவார்களேயானால், நம் தாய்மொழி இத்தகைய தாழ்ந்த நிலையை அடைந்திராதென்றே நம்புகிறோம்.

அன்றியும் பத்திரிகைக்கு ஆயுள் சந்தாதார்களாகச் சேர்ந்தும் சேர்வதாகவும் சொல்லி நமக்கு ஊக்கமளித்துவரும் நேயர்களுக்கு எல்லா நலன்களையும் ஒருங்கே அளித்தருளும்வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றோம்.

---

# வெற்றிக்குரிய வழிகள்.

## 1. ஆரோக்கியம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். (பழமொழி)
நோய்க்கிடங்கொடேல். (ஆத்திச்சூடி)
இளமையிற் சிறந்தன்று மெய்ப்பிணியின்மை. (முதுமொழிக் காஞ்சி.)

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றங் கல்விநோ யின்மை
இலக்கணத் தா லிவ்வெட்டு மெய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர் (ஆசாரக்கோவை)

"நோயற்ற வாழ்வினன் வாழவேண்டும்"
(இராமலிங்கசுவாமிகள்)

நாம் அனுபவிக்கும் எல்லாவிதமான இன்பத்திற்கும் தேகாரோக்கியமே முக்கிய ஆதாரமாயிருக்கிறது. பிணியுள்ளவர்கள் என்றும் எக்காரியத்தையும் சரிவர முடிப்பதில்லை. தேக சௌக்கியம் பெரும்பாலும் நாம் வாழ்ந்து வரும் நிலைமையை ஒத்திருக்கின்றது. தேகாரோக்கியத்திற்கு முக்கியமானவை உணவு, ஜலம், காற்று, வீடு, சுத்தம் என்பவைகளே. ஒருவன் சுத்தமானகாற்றை உட்கொண்டும், நல்லநீரைக்குடித்தும் பத்தியமான ஆகாரத்தை உண்டும், வீடு, சரீரம் முதலியவற்றைப் பரிசுத்தமாயும் வைத்துக்கொண்டால், அவன் ஆரோக்கியத்துடனும் தீர்காயுளுடனும் இருப்பானென்பது நிச்சயம். எண்ணிறந்த மக்கள் பலர் நெடுங்காலம் ஜீவித்திருந்திருக்கின்றனர். அவர்கள் யாவரும் மேற்கூறிய விஷயங்களை 'நன்கறிந்து' சரிவர கவனித்து நடந்துவந்தவர்களே யாம்.

அநேகர் ஒரு காரியத்தை ஆரம்பித்துவிட்டு, அது முடிவு பெறுந்தருவாயில் அவர்கள் நோய்வாய்ப் படுதலால் அக்காரியத்தை முற்றுப் பெறுமற் செய்து விடுகின்றனர். அக் காலத்தில் அவர்களுடன் எவரும் சம்பாஷித்தலரிது. ஏனெனின் அந்நோயின் வலியினுல் பேசுபவர்களுடன் அவர்கள் சீறிவிழுவார்கள். அதன் பயனுல் எண்ணிய காரியமும் நிறைவேறுவதில்லை.

நோய் கொண்டகாலத்து, தம் உற்ருர் உறவினர் எவரையேனும் ஏவி, அக்காரியத்தைச் சரிவர முடித்துக்கொண்டுவிடலாமென நினைப்பது மிகவும் தவறுகும். தான்நேரில் சென்று முடிக்க வேண்டிய காரியத்தை மற்றவர்கள் எவ்வளவு வரையில் சரியாய்க் கவனிக்க முடியும்? அதனுல் பணவிரயமும் காலதாமதமுமாகுமல்லாது சௌகரியம் சிறிதுமில்லை.

"மனிதர் தாங்களாகவே தங்களை மாய்த்துக் கொள்கின்றனர்" என்ருர் ஒரு பெரியார், இது ஓரளவு உண்மையேயாகும். அநேகர் வியாதிவர வொட்டாமல் தடுத்துக் கொள்ளாததுந்தவிர, வந்த பின்பும் சிகித்சை செய்துகொள்ளாமல் அசட்டையாய் இருந்து விடுகிருர்கள். அதனுல் அவர்களுடையும்

துன்பம் சொல்லத்தாமன்று. பின்பு மனோவியாதியும் உண்டாகி மரணமெய்துகின்றனர்.

அன்றியும் தேகம் நன்ருய் வளர்வதற்கு ஏற்றகாலம் இளமையென்பதையும் அறியாதொழிகின்றனர். ஆதலின் இன்னவரது சந்ததியார்கள் வரவர மெலிவுற்று, பின் நோய்கொண்டு வெகு சீக்கிரத்தில் மடிக்கின்றனர்.

ஒரு சமயம் ஒரு நோயாளியை அவரது நண்பர் காணச்சென்றபொழுது, " இன்னும் எவ்வளவு காலம்வரையில் தாங்கள் உயிருடனிருக்கலாமென நினைக்கின்றீர்கள் ? இந்நோய் நீங்காதெனக் காண்கின்றீர்களா ? எனக்கேட்டதற்கு, அவர் சட்டெனத் தாமதமின்றி, " வைத்தியர் வரும்வரையில் நிச்சயம் உயிருடனிருப்பேன்," எனப்பதில் உரைத்தார்.

" அப்படியாயின் தாங்கள் கடைசியாக எப்பொழுது வைத்தியரை வரவழைத்தீர்கள்," என அச்சிநேகிதர் மீண்டும் அந்நோயாளியை ஆச்சரியத்துடன் உசாவினூர்.

" சரி இன்றைக்கு என்ன தேதியாகின்றது. சரியாய் எண்பத்தாறு வருஷங்களுக்கு முன்பாக," என ஓர் வித புன்சிறிப்புடன் அப்பிணிகொண்டவர் பதில்பகர்ந்தார். அது அந்நோயாளியின் பிறந்த தினமாகும்.

இதனுல் என்ன விளங்குகின்றது. அவர் பிறந்த எண்பத்தாறு வருஷங்களாக வியாதி என்பதைச்சிறிதும் கண்டவரல்லவென நன்கு புனலாகின்றது. (தொடரும்)

தி. சு. மகாலிங்கம்.

---

# தொண்டைமான் இளந்திரையன்.

[ஸ்ரீகாழி-ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்களது உரையினைத் தழுவிய இக்கோவை முதற்கண் இளந்திரையன் பெருமையையும், பின்னர் அவன் ஆண்ட தொண்டைமண்டலச் சிறப்பையும், அம்மண்டலத்து முதன்மையாளரது

வரலாற்றையுங்கூறுவது. ரா. சம்பந்தமுதலியார்.]

இவன் யார்?

'தொண்டைமான் இளந்திரையன்' என்பவன் பெரும்பாணாற்றுப் படைக்குத் தலைவன். இவன் குலமுதல்வன் தொண்டைமான் திரையன். 'தொண்டைமான்' 'திரையன்' என்னும் இருசொற்களும் காரணப் பெயர்களாய்த், 'தொண்டைமான் என்பது 'தொண்டைக் கொடியை உடையோன்' என்றும், திரையன்' என்பது 'அலைகளாலே தரப்பட்டவன்' என்றும் பொருள் படும். இவ்வாறு பொருள்படுவதற்குத் தக்க ஆதாரம். பத்துப்பாட்டு, பெரும்பாணாற்றுப் படையிற்கூறியிருக்கும் 'அந்நீர்த் திரைதருமரபின் பல்வேற்றிரையன், என்ற வடிக்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையும் விசேடவுரையுமே ஆம். அவை வருமாறு 'அக்கடலின் திரைகொண்டுவந்து ஏறவிட்ட மரபாற் பலவேற்படையினையுடைய திரையனென்னும் பெயரையுடையவன்.'' என்றதனால், நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னிகையைப்புணர்ந்த காலத்து அவள் யான்பெற்ற புதல்வனை என் செய்வேனென்றபொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின், திரையனென்று பெயர்பெற்ற கதைகூறினார்' என்பன. இவ்வுரைக்கிணங்கவே திருமுல்லைவாயிற்புராணம் தொண்டைமான் வழிபடு படலத்தில்

'திரைகடந்து வந்தடைந்த தொர் பரிசினாற் செம்பியன்திரு [மைந்தன்,
திரையனென்றிடச் சிறந்தனன்'
'தொண்டையாற் செறித்தலாற் றிரிபின்றிக்கரை தருந்,
தொண்டைமானென யாவருங் கட்டுரைத் திடலானான்'

என்னுஞ் செய்யுளடிகளும் 'தொண்டைமான் திரையன், என்னுந் தொடருக்குப் பொருள் கூறுகின்றன. இத்தொண்

டைமான், காசிபர் அதிதிவயிற்றில் தோற்றுவித்த ஆதித்தன் மரபினனாகவும், இவன் மனைவி நாககன்னிகை அம்முநிவர் கர்த்துருவின் வயிற்றிற் பிறப்பித்த சேடன் மரபினளாகவும் இருவரும் ஒத்த குலத்தினராதல் காண்க. இவ்வாறன்றி இளந்திரையனை மக்களுட் சேர்ந்தானாகவும், நாககன்னிகையைநாகா என்ற மக்களுட் சேர்ந்தாளாகவும் சிலர் எண்ணிக் கூறுவர். அக்கூற்று நிலையுதலிலது. இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியவரலாற்றுடன் ஒத்துக் கூறுவன திருநாகைக் காரோணப்புராணமும் வடதிருமுல்லைவாயிற்புராணமும். முதற்கண்ணே திருநாகைக் காரோணப் புராணம் கூறுவதைச் சுருக்கியீண்டுத் தருகின்றேன். (தொடரும்)

---

# நம்மாழ்வாரவரது திருச்சீர்த்தொடை

(70-வது பக்கத்தொடர்ச்சி.)

---

இவரன்னோரைப் பெருமான் திருவவதாரஞ் செய்வித்த காரணம்:— "திருமால் மனுஷ்யரைத் தம்வசப்படுத்தத் திருவுளமிரங்கி இனி இவர்களை வசீகரித்தற்கு வழியாதோ என்று திருமகளோடு தீர்க்காலோசனை செய்து, தீபகங்காட்டி மிருகம் பிடிப்பார் போல, இவர்க ளினத்தவ ரென்னலாம் படியான சேதனரைக்கொண்டு இவர்களைக் கைப்பற்றுவதே உத்தமமாகிய வுபாயம் எனநிச்சயித்ததே."

இப்பெரியார்க்கு 16-ம் வயதில் அன்றியும் அதற்கு முன்னரே பரமபதநாதனது நியமனத்தால் சேனைத்தலைவர் பஞ்சசமஸ்காரஞ்செய்து சகல மந்திரார்த்தங்களையுமுபதேசித்தார். இதன்பின் மதுரகவியாழ்வார் இவரைத்தரிசித்துச் 'செத்தத்தின் வயிற்றிற் சிறியது பிறந்தால் (சிறியதின் வயிற்றிற் பெரியது பிறந்தால்), எத்தைத்தின்று எங்கே கிடக்கும்' என்று கேட்ப அவர் 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்று விடுத்தார். இதுவரை மூச்சுப்பேச்சற்றிருந்த பெரியார் பகர்ந்த விடை பல படித்தாகப் பொருள் கொள்ளக் கிடவாமல், வினாவிற் கேற்ற விடையாகக் கேட்டார்க்கேற்ற கொடையாக

ஒரு படித்தாய்ப் பொருள் கொள்ளக்கிடப்பது என்ன வியப்பு! இதனால் அசித்தாயது சரீரம், அணுவளவிது ஆத்துமா, அவ்வாத்துமா அச்சரீரத்தைச்சார்ந்த சுகதுக்கங்களை அநுபவித்து அதனை ஆசிரயித்து இருந்து அவ்வநுபவமொழிதற்பொருட்டு அணுரூபமான தன்னிடத்து விபுரூபமான ஞானவிகாசம் உண்டாகி அகாரவாச்சியமானபரப்பிரஹ்மத்தை அநுபவித்து அதன் பக்கற் பற்றும் என்னும் உண்மை விளங்கும். இவ்வுண்மைப்பொருளே இவரது நான்கு பிரபந்தங்களிலும் கூறப்படுவது. மதுரகவியாழ்வார் இவரை ஆசிரயித்துத் தத்துவஹித புருஷார்த்தங்களையுசாவுகையில், எம்பெருமான்தோன்றியருள, ஆழ்வார் ஆனந்த வெள்ளத்தழுந்தி, அப்பிரீதியைப் பிரபந்த முகமாக வெளியிட்டுப் பரந்தாமனைச்சிந்தித்துப், பரபக்தி பரஞானபரமபக்திகளையுடையனாய், 35 திருநட்சத்திரம் வாழ்ந்திருந்து, திருமாமணி மண்டபத்தையலங்கரித்தனர். பிறவிருத்தாந்தங்கள் இதன் அநுபந்தம் 1-ல் காண்க. (தொடரும்)

ப· அ· முத்துத்தாண்டவராயபிள்ளை·

---

# "சிவப்பிரகாசன்" தாசி மோகனம்.

(72-வது பக்கத்தொடர்ச்சி.)

(ஜெக)எஜமானது அருமை பெருமை விவேகம் பெருந்தன்மையையுமே பேசிக்கொண்டிருக்கையில் மோகனம் சொல்லுச்சு,இவ்வளவும் என்னாலேதான், எனக்காகத்தான் சின்னமாமா கொடுத்தாங்கோ என்றுச்சு, அவள் தாய் ஜெகதாம்பாள் சரிதான் சின்ன மாமாஎன்றுயே எந்தமுறை, யார் உன்னைக் கூப்பிடச்சொன்னது என்றாங்கோ, அதற்கு அதுமுன்பு, அக்காளை வைத்திருக்கும் ஐயர் பாவடையும், ரவிக்கையும் சோப்பும், செண்டு பாடிலும் வாங்கிக் கொடுத்தப்போ நீங்களெல்லாம் மாமாவென்று கூப்புடச் சொல்லவில்லையா ? அதை நினைத்துக் கொள்ளுங்கோ அவாளைவிட இவுங்க எத்தனையோ பங்கு உயர்ந்தவங்களாதலினால் கூப்பிட்டேன் என்று சொல்லிக்கொண்டே எஜமானுடைய சருகைத் துப்பிட்டாவில் வாசனைகளைத் தடவிக்கொண்டிருந்திச்சுங்கோ நாங்களெல்லாம் கண்டு

ஆச்சரியப்பட்டு, மோகனம் சிறுசு அறியாக்குழந்தை இதுக்கு இவ்வளவு பெரும் புத்தி வரக்காரணம் ஓங்க புண்ணியந்தான் என்றேன். அப்போது தங்காச்சி அழகியவல்லி, ஓங்களுக்கும் இவளுக்கும் ஏதோ தொந்தமிருக்குது என்றும், அது ப்ராப்த வச மென்றும் வரவா புத்தியும் மேலாகிறதென்றும் நாமும் அவுங்களும் (சிவப்பிரகாசன்) விழித்தநேரம் நல்லநேரமென்றும் அவுங்க இஷ்டப்படி நாம் மனப்பூர்வமாக நடக்கவேண்டு மென்றும் அவுங்களும் நம்மை அன்போடுரச்சிப்பாங்க என்றும் கடவுளும் அவ்வாறே அருளவேண்டுமென்றும் சொல்லுச்சுங்க. நாங்கள் இதுவரை ஓங்கவரவை எதிர்பாத்துக்கொண்டிருந்தும் தாங்கள் வராமையால் தங்காச்சி சொன்னதின்பேரில் வந்தேன்

(சிவ) இதைக் கேட்டதும் மயிர் கூச்சலிட்டுப் பரவச மாகி ஜெகன்னூதா !! நான் என்ன அவர்களுக்குச் செய்து விட்டேன். என் விஷயமாக இவ்வளவு சொல்வது மிக்க ஆச் சரியத்தை உண்டு பண்ணுகிறது. அவர்களெல்லாம் மிக்க நல்லவர்கள் போலும், அவர்களது பெருந்தன்மையை விசேஷி த்துக் காட்டுகிறது. மேலும் எனக்கும் காரணம் இல்லாமலே அவர்களிடத்து அன்புண்டாகி இரவு முழுமையும் அவர்கள் ஞாபகமே. அழகியவல்லி நினைத்தமாதிரியே நம் சிநேகம் எக் காலமும் பிரியாதிருக்க ஆண்டவன் அருள் பாலிப்பாராக. அதிருக்கட்டும், எல்லாரும் காபி சாப்பிட்டார்களா ?

(ஜெக) கிடையாதுங்க, நான் எவ்வளவோசொல்லிச் சாப் பிடச் சொன்னேன். தாங்கள் வந்துதான் சாப்பிடுவதாகப் பிடிவாதமாய்ச் சொல்லிக்கொண்டிருக்குதுங்க,

(சிவ) அடபாபமே நான் வருவதற்கிடமிருந்தால், நேற்றி ரவே வந்துவிடமாட்டேனு ? என் மேல் பழிசுமத்தலாமா ? நீ உடனே சென்று எனதுண்மை அன்பை அவர்களுக்குச் சொல்லி அவர்களது அதிகமான வாஞ்சையே என் மனதை நிறையச் செய்கிறதென்றும் தெரிவித்து இதோ இருக்கும் காபி பலகாரம் பழம் முதலியதைக் கொண்டுபோய்க்கொடு த்து அவர்களை உண்ணும்படிச் செய்து, சீக்கிரத்தில் எங்கள் வீட்டிற்கு அவர்களை அழைத்துவா என்றார். (தொடரும்)

S. T. விகடம்.

# மதிப்புரை.

ஸ்ரீமத் காஞ்சீகாமகோடி பீடாதிபதி சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆஸ்தான வித்வானும் ஆர்யதர்மம் என்ற பத்திரிகையின் ஆசிரியருமான பிரும்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் வெளியிடப்பட்ட ஜாதிநிர்ணயம் யென மகுடந்தாங்கிய ஒரு நூல் வரப்பெற்றோம். இஃது, ஜாதி என்பது கல்வி, குணம், தொழில் ஆசாரம் முதலியவற்றின் காரணமாக ஜாதிநிர்ணயம் ஏற்பட்டதென்று தர்க்கிக்கும் நிபுணர்களைப் பூர்வபக்ஷி யென முன்னிலைப்படுத்தி, அநாதியாய்க்கொண்டாடப் பட்டுவரும் வேதாகம புராண சாத்திரங்களிலிருந்து மேற்கோள்களுடன், பாலர் முதல் விருத்தர் வரையிலும் ஸ்திரீகளுங்கூட வெகு எளிதிலறியும்படி, பலவகை ஆக்ஷேபனைகளுக்கும் சமாதானங்கள் கூறி, நால்வகைச்சாதியும் சிருட்டிக்கால முதலுள்ளதென்பதைத்தெளிவாக விளக்கிக்காட்டிருக்கிறார்கள்

குலாசாரங்களும், ஜாதி பேதங்களும், தேசத்திற் கொவ்வாத நாகரிகங்களின் பயனாகவோ அல்லது யாது காரணத்தினாலோ வான் முறையின்றி சீர் கேடடைந்துத் தத்தளிக்கும் இச்சந்தர்ப்பத்தில் இத்தகைய நூல் ஒன்று அன்னார் வெளியிட்டது ஓர் பேருதவியேபாகும். இவ்வரும் பெரும் புத்தகம் ஒவ்வொருவர் கைத் தலத்திலும் இருந்து வருமாயின் நம் பாரதத் தாய் மனங்குளிர்வதோடு அவள் மக்களாகிய ஹிந்துக்கள் தம் மதத்தில் பற்றுதலுடையவர்களாய்ச் சத்தியநெறியாலும் ஜாதிமுறைமையாலும் தவறாது நடந்துவா அருள்புரியுமென்றே நம்புகிறோம்.

# விசேஷக் குறிப்புகள்.

நாம் நம் "குணநிதியை" அனுப்பியதற்கேற்க ஏற்று ஆதரித்துவரும் சந்தாநேயர்கள் பலர் அதன் சந்தாத்தொகை ரூ. 1—0—0யும் மணியார்டர் மூலமே அனுப்பி உத்ஸாகப்படுத்திவருகின்றார்கள். அன்னார்களின் முயற்சி பாராட்டற்பாலதே!

நமது சந்தாநேயர்களில் V. P. போஸ்டு மூலம் அனுப்பவிரும்பியவர்களுக்கு மட்டுமே அனுப்பியுள்ளோம். வீணே அதிகச்செலவு ஏற்படாதிருக்கவேண்டி இதுவரை V. P. யில் அனுப்பாமல்இருந்து வருகிறோம். இனியேனும் இச்சஞ்சிகை பெற்றவுடன் சந்தாத்தொகையை அனுப்பாத மெம்பர்களுக்கு V. P. போஸ்டு மூலமாய் மறுசஞ்சிகை அனுப்பநேரும் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

---

நம் குணநிதிப் பிரசுரசாலையின் உதவிக்காக T. S. மகாலிங்கய்யர் அவர்களை நியமனம் செய்திருக்கிறோம். அவரிடம் ரசீது பெற்றுக் கொண்டு சந்தாத்தொகையைச் சேர்ப்பிப்பதோடு சந்தாதாரர்களாகப் பதிவும் செய்துகொள்ளலாம். பத்திராதிபர்.

# பரிமளப் பொக்கிஷம்.

எது ?

கும்பகோணம் பெரியகடைவீதி

## K. அப் துல்ரஹிமான் சாஹிப்&சன்ஸ்

## ப்ரிமளச்சாலை.

1 சந்தனாதித்தைலம்.
2 அரைக்கீரை விதைத்தைலம்.
3 மணமிகுவீசும் பத்திகள்.
4 புனுகு ஜவ்வாதுகள்.
5 பஞ்சவர்ணபக்குவக்கொப்பரைச் சீவல்.
6 சற்குண ஸ்நானப்பொடி.
7 சந்தனவில்லைகள்.
8 சித்தர்விரும்பும்அத்தர்தினுசுகள்
9 வாசவர் மெச்சும் கேசர்பவுடர்.
10 பரிமள பாக்குத்தூள்.
11 பரிமள வில்லைகள்.
12 மணமிகு அரகஜா.
13 சுகந்த சந்தனப்பவுடர்.
14 பரிமளச் சுண்ணம்பு.
15 நற்குண பற்பொடி.
16 ஈசனுக்குரிய தசாங்கம்.
17 ரோஜாப்பு குல்கந்து.
18 சரிமண நறுமண கலவைச் சந்தனம்.

நமது பரிமளச்சாலையில் ஷை வாஸனாதிரவியங்கள் நம் முன்னோர்களின் அனுபவ முறைப்படி தயார் செய்து வழங்கிவருவது யாவரும் உணர்ந்ததே. நம் வியாபாரப் பெருமையும் சாமான்களின் உயர்வும் அரசர் முதல் யாவராலும் அங்கீகரித்து உபயோகப்படுத்தி வருவதென்பது ஒருமுறை வாங்கியவர்களுக்கே தெரியும். இவை முனிச்சிரேஷ்டர்களான ஷேக்பரீத், சக்கர கஞ்ச் அவுலியா அவர்களால் செய்யப்பட்ட உயர்ந்தமுறையாகும். தஞ்சை அரசருக்கும், டில்லி சக்கிரவர்த்திகளுக்கும் எங்களது முன்னோர்களால் பரிமளப் பொருள்கள் செய்து கொடுக்கப்பட்டுவந்தன. தற்காலத்தும் நாமே பலவிடங்களுக்கும் பரிமளஸாமான்கள் செய்துகொடுத்து நற்கியாதியும் பெற்றிருக்கிறோம் விலையும் சரசம். (விலை ஜாபிதா இனம்)

தங்களது ஆர்டரை எதிர்பார்க்கும்:—

**K. ABDUL RAHIMAN SAHIB & SONS..**

**Attar Merchants,**

**KUMBAKONAM.**

## "குண நிதி"யின்

### போஷகர்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள்,
திருவாவடுதுறை ஆதீனம்.

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள்,
தருமபுரம் ஆதினம்.

ஸ்ரீலஸ்ரீ காசி வாசி சுவாமிகள் அவர்கள்,
ஆதீனகர்த்தர், திருப்பனந்தாள்.

### ஜீவியசந்தாதார்கள்.

ஸ்ரீலஸ்ரீ தரு. ஞா. ஷண்முகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,
தேவஸ்தானம் விசாரணை, வேளூர்.

ஸ்ரீலஸ்ரீ குஞ்சிதபாதத்தம்பிரான் அவர்கள்,
தருமபுரம் ஆதீனம்.

ஸ்ரீமான் K. V. மாணிக்கம்பிள்ளை அவர்கள்,
மிராசுதார், குடவிளாகம்.

## "குண நிதி"

### சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி யுள்பட | உள்நாட்டிற்கு | 1—0—0 |
| | வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை விலை | 0—2—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா. | உள்நாடு ... ... | ரூபா. 15—0—0 |
| | வெளிநாடு ... ... | ,, 20—0—0 |
| வருடம் ஒன்றுக்கு | அபிமானிகளுக்கு | ரூபா. 25 0—0 |
| | போஷகர்களுக்கு | ,, 50—0—0 |

### விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூபா. | 6—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ,, | 3—8—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 2—0—0 |

முன் பணம் இன்றி விளம்பரஞ் செய்யப்படமாட்டாது.

"குண நிதிப்"பிரசுரசாலை, திருவிடைமருதூர்.

Publisher:— M. S. Pichaiya Desikar, Thiruvidaimarudur.
Printer:— V. Srinivasa Thathachariar, S. K. Press, Kumbakonam.

# இம்மாத அநுபந்தம்.

## இரக்தாக்ஷி ௵ ஐப்பிசி ௴ ௧௨

"குணநிதி" சந்தா நேயர்காள்!!

நாம் அனுப்பியவண்ணமே குணம், நிதி இரண்டையும் உடையவராகி, தங்களது நண்பர்களையும் "குணநிதி" யினிடத்து அபிமானங் காட்டிவரும்படிச் செய்து, எவரிடத்தும் குடிகொண்டிருக்க வேண்டுமென்பதைக்கருதி, சொற்பமே ஏற்படுத்தியுள்ள அதன் கையொப்பத் தொகையையும் வசூல் செய்து அனுப்பிக் குறித்தகாலத்தே வெளிவந்துலவுதற்கான பல சௌகரியங்களையுந்தேடி, தமிழ்த்தாயின் அருளுக்குப் பாத்திரராகும் பெரியாரின் முயற்சியை என்றும் மறவோம். மேலும் அன்னார்களின் பெயர்களையும் சில காரணங்களுக்காகத் தனியேயும் குறித்திருக்கிறோம். அவை பின் வெளிவரும்.

மேலும், சிலர் நம்நாட்டிலேயே தமிழர் வயிற்றில் பிறந்து, பிறபாஷையிலும் பாண்டித்தியமற்றும், தமிழைப் பேசுவதும், வரைவதும் ஓர் விதக்குறை வென்றெண்ணி "மணிப்பிரவாளம்" போல், அறிந்தவரும் அறியாதவரும் பேசி அனர்த்தத்தை உண்டு பண்ண முன் வருகின்றார்கள். அந்நிலையை நோக்கப் பிறரை நோவதிற்பயனில்லை. அன்றும், நம் நாட்டவர்களே தாய்மொழியின் முன்னேற்றத்திற்குக் "கோடாலிக்காம்பு," போல் இருந்து வருகின்றார்கள் என்பதும் எவரும் காணலாகும். இம்மட்டோ, பிறபாஷைகளில் எல்லாம் பல நாமங்களைக் கொண்டு பல காலமாகப் பல்லாயிரம் சந்தாதாரர்களையுடையதாய் விளங்கிவரும் பத்திரிகைகளைக் கண்டுங்கூட உணர்ச்சியின்றி, தமிழன் என்று மட்டும் சொல்லிக்கொண்டு தற்கால நாகரிகத்திற் சிக்குண்டு, வீண் ஆடம்பத்திற்கும், பட்டத்திற்கும் விரும்பிப் பொருள் தேடி சூது, டிராமா, பயாஸ்கோப் முதலியவைகளில் செலவு செய்து, வீண் காலங்கழித்துத் தன் தொந்தியைத் தடவிக் கொண்டிருந்தால் முன்னேற்றம் பெறலாகுமா? அந்தோ!! இந்நிலையிலுள்ளாரைப்பற்றி விரிக்கிற் பெருகும். இதற்குச் சான்றாகவும் பலர் முன் வருவார்கள். நிற்க,

நம் தாய் மொழியிலுள்ள பத்திரிகைகள் மிகச் சொற்பமே. இதை நோக்கில், நம் நாட்டாருக்குப் பத்திரிகையின் மேலுள்ள அபிமானத்தையே காட்டுகிறது. ஆதலின், இனியேனுங் குறைகூறுவதிற்கிடமிராது. நம் தாய் பஷையிலுள்ள பல பத்திரிகைகளையும் ஆதரிக்க முன் வருவார்களாக.

இன்றும், குணமுடையவரெனக் கருதியனுப்பியதில் சிலர், ஒன்று இரண்டு பத்திரிக்கைகளைப் பெற்றுக் கொண்டு வேண்டாம் என்பதைப் பின்போன பத்திரிகைகளைத் திருப்பி, அறிவித்துள்ளார்கள், அவர்களோ நம் நாட்டில் மிக்க அந்தஸ்து உடையவர்களாகக் கொள்ளும் மனிதர்களுள் முக்கியஸ்தராகக் கொள்ளக் கூடியவர்களாகவே யிருப்பார்கள். அவர்களின் பெயர்கள் பின் வரும்.

ஆயினும் வி. பி. வரும்வரையில் பத்திரிகைப் பெற்றுக் கொண்டு வேண்டாமென்பவர் பலர். அவர் பக்கல் சேராது எவ்வாறேனும் முன்னரே அவர்கள் அறிவித்த நன்றியையும் மெச்சுகிறோம்.

மேலும், நம் குணநிதி உடையாருக்கு வீண் செலவும், நமக்கு அதிகச் சிரமமும் ஏற்படாதிருக்க வேண்டுமென்றே, விரும்பியவற்கன்றி V. P. அனுப்பாமல் வருகிறோம். இனியேனும் தாமதியாது சந்தாத்தொகையை மனியார்டர் மூலம் அனுப்புவதோடு. ஒவ்வொரு சந்தாதார்களும் தங்களால் இயன்ற சந்தாதாரர்களையும் சேர்த்து அனுப்பி, உத்சாகப் படுத்த முன் வரும் வண்ணம் இறைவன் அருளை இறைஞ்சுகிறோம்.

சுபம்

பத்திராதிபர்.

---

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.